# அண்ணா நீ வாழ்க



ஆசிரியர்:

கவிஞர் சி. சிவஞானம்

ஈழமுரசு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சி முதல்வர்

## உயர்திரு. அ. அமிர்தலிங்கம்

அவர்களின்

# 55ஆவது பிறந்த நாள்

இன்று அன்னாருக்கு

எமது இதயங்கனிந்த

நல் வாழ்த்துக்களைத்

தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

V

## தெல்லிப்பளை

## பல நோக்குக் கூட்டுறவுச்

## சங்கம்.

(வரையறுக்கப்பட்டுள்ளது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

55 ஆண்டுகளில் 35 ஆண்டுகளை, தமிழ்இனம் வாழ, தன் வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு தலைவனை "பல்லாண்டு வாழ்க" என, வாழ்த்துவதில் பெருமைப்படுகிறேன்.

ஈழத்தின் சரித்திரத்தில் பல தமிழ்த் தலைவர்கள் தோன்றி, தமிழ் இனத்தை வழி நடத்தியது வரலாறு. வாழையடி வாழையாக அந்தப் பரம்பரையில் தோன்றிய தலைவர்தான் - நண்பர் அமிர்தலிங்கம் அவர்கள். திரு. அமிர்தலிங்கம் தனது 20வது வயது தொடக்கம் இன்றுவரை, நல்ல தொண்டனாக இளம் தலைவனாக, விசுவாசமுள்ள துணைவனாக, தன்னிகரில்லாத் தலைவனாக, தமிழ் இனத்தின் ஏக தலைவனாக, உழைப்பால், தியாகத்தால் உயர்ந்து நிற்கிறார். தம்பி சிவஞானம் அவரை, "அண்ணா, நீ வாழ்க" என்று முன் சொல்ல, "நண்பா, நீ என்றும் வாழ்க" எனச் சொல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளது.

நண்பர் அமிர்தலிங்கத்தினதும் எனதும் அரசியல் வாழ்க்கைகள், தோன்றி வளர்ந்த பாசறைகள் வேறானவை. ஆனால், சென்ற பத்து ஆண்டுகளாக இணைந்து பணிபுரிந்துள்ளோம். இந்தக் காலகட்டத்தில் அவருடைய இனப்பற்றையும், தமிழ் ஆர்வத்தையும், அரசியல் நுட்பத்தையும், மனச் சுத்தத்தையும், கொள்கைப் பிடிப்பையும், அஞ்சா நெஞ்சத்தையும், அநியாயத்தைக் கண்டு கொதித்தெழும் குணத்தையும், சகிப்புத் தன்மையையும், நாவன்மையையும், தலைவனுக்குரிய கவர்ச்சியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையக் கண்டுள்ளேன். எனவேதான் அவரின் விரோதிகள் காரணமற்று அவரைத், தாக்கும் பொழுது மனம் பொறுக்குதில்லை, என் சக்திக்கு ஒப்ப, அவருக்குப் பின்னால் நிற்க வேண்டுமென்ற ஆர்வம் வளர்கிறது. எனவே, ‘நண்பா, நீ முன் செல், நாம் உமக்குப் பின் நிற்போம்’’ என்று வாழ்த்துகிறேன்.

நாம் செல்லவேண்டிய பாதை மிக மிக நீள மானது. அந்தப் பாதையில் நம்மை வழிநடத்திச் செல்லக்கூடிய ஒரே ஒரு தலைவர் திரு. அமிர்தலிங்கம் தான். எதிர்க்கப்படவேண்டியவற்றை எதிர்த்து; செய்யவேண்டியவையைச் செய்து; விட்டுக்கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக்கொடுத்து; சிரிக்க வேண்டிய இடத்திற் சிரித்து; முறைக்கவேண்டிய இடத்தில் முறைக்கும் திரு. அமிர்தலிங்கம் தான் இந்தக் காலகட்டத்தில் எமக்கு வேண்டிய தலைவர் எனவே, அந்தத் தலைமைக்கு வலுக்கொடுத்து நமது இலட்சிய தமிழ் ஈழத்தைக் காண வாருங்கள் என்று எல்லாத் தமிழ் மக்களையும் அழைக்கிறேன்.

நண்பனே! கடவுள் உமக்குத் தக்க ஓர் வாழ்க்கைத் துணைவியையும், சற்புத்திரர்களையும் தந்துள்ளார். மேலும், உங்களைப் பல்லாண்டு வாழ வைத்து, தந்தை செல்வா சொன்ன வார்த்தையை - ‘எனது காலத்திற் தமிழ்ஈழம் கிடைக்காவிட்டாலும், அமிர்தலிங்கத்தின் காலத்திற் கிடைக்கும்’ என்பதை மெய்யாக்க ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

வணக்கம்

நல்லூர், மு. சிவசிதம்பரம்
யாழ்ப்பாணம், பா. உ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீமெந்து பொதுத்தொழிலாளர் யூனியன்.
பிரதான வீதி,
காங்கேசன்துறை.
27-7-82

எம்மினத்தின் பெருந்தலைவர் உயர்திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களது ஐம்பத்தைந்தாவது வயது நிறைவையொட்டி, கவிஞர் திரு. சி. சிவஞானம் அவர்களால் எழுதப்பட்ட அண்ணா நீ வாழ்க எனும் புத்தகம் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

எமது பெருந்தலைவரின் வாழ்க்கையின் போராட்ட வீர வரலாற்றினை குறுகிய புத்தகத்தில் மிகத் தெளிவாக எழுதியிருப்பது பாராட்டுக்குரியது.

பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் மிக்க கவிஞரின் சொல்லாட்சியும். பொருட்செறிவும், இனிமை மிக்க சொற்றொடரும், படிப்போரை மிக்க பரவசத்திலாழ்த்தும் என்பதில் ஐயமில்லை.

இளங்கவிஞரின் இக் கன்னிமுயற்சியைப் பாராட்டுவதுடன் அவரது இச் சீரிய பணி மேலும் வளர வாழ்த்துகிறேன்.

சி. கதிரவேலன்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் விடுதலைக் கூட்டணியின்
கட்டுவன் கிளைத் தலைவர்
ஆசிரியர் க. நவரத்தினம் அவர்கள்
வழங்கிய

# முன்னுரை

## நாவலர் அமிர்தலிங்கம்!

தமிழ் ஈழத்தின் விடிவிளக்கு. தமிழ் உணர்வின் தோற்றுவாய், தமிழ் ஈழத்தின் வரலாற்றை எழுதவந்த புத்துலகச் சிற்பி, நாவலர் அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றித் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாள ரும் எனது இளம் நண்பரும் ஆகிய கவிஞர் சி. சிவஞானம் அவர்கள் எழுதிய 'அண்ணு நீ வாழ்க' என்ற நூல் உணர்ச்சி பொங்கும் நடையில் எழுதியிருப்பதைப் பார்த் தேன்.

மூதறிஞர் தந்தை செல்வாவின் வாரிசாக விளங்கும் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் அந்தத் தந்தைக்குப் பிறகு கட்சியின் உயிர்த்துடிப்புமிகு தலைவராக, இன்றைய எதிர்க்கட்சி முதல்வராக, அவனி புகழும் நாயகனுகப் பவனி வருவதை இந்நூல் சுவைபடக் கூறுகிறது.

முப்பத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்களும் படித் துப் பயனடைய வேண்டியது இந் நூல். தலைவரின் புகழ் வளர்வதைப் போலவே கவிஞரின் எழுத்தாற்றலும் வளர்ந்து பிரகாசிக்க வாழ்த்துகிறேன்.

வாழ்க அமிர். வளர்க அவர் செயல்.

கட்டுவன்
7-8-82

அன்புள்ள
க. நவரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலைப்பற்றி....

தமிழ் மக்களின் மதிப்புக்குரிய பெருந்தலைவனாகத் திகழ்ந்த தந்தை செல்வா அவர்களின் பாசறையில் வளர்ந்து, அவரின் வாரிசாக அரசியலில் புகுந்து தமிழ் மக்களின் உள்ளங்கவர் தலைவனாக விளங்கும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் ஐம்பத்தைந்தாவது பிறந்ததினத்தையொட்டிக் கட்டுவன் மத்தி வீஸ்வநாதப்புலவர் சனசமூக நிலையத் தலைவரான திரு. சி. சிவஞானம் அவர்களால் எழுதப்பட்ட "அண்ணா நீ வாழ்க" என்ற இந்நூல் வெளியிடப்படுகின்றது.

தற்காலத்திற்கேற்ற பாணியில் அண்ணன் அமிர்தலிங்கத்தின் வாழ்க்கை ஏட்டில் இடம் பெற்ற உள்ளத்தைத் தொடும் சம்பவங்கள் பல இந் நூலில் அடங்கியிருக்கின்றன. சோதனைகள் மத்தியில் இன்று தமிழினம் வாழ்ந்துகொண்டிருக்கிறது. தக்கசமயத்தில் தலைவரின் செயற்பாட்டுக்கு மேலும் வலுவூட்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது.

இளைஞர் மத்தியில் பெருமதிப்பைப் பெற்றுவரும் தம்பி சிவஞானத்தின் இப்படைப்பை அச்சிட்டு வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் இவர் பணி தொடரவேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

வ. சின்னத்துரை
பாலர் ஞானோதய,
கலை உடல் வளர்ச்சிக் கழகம்

வறுத்தலைவிளான்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்கம்

**என் இனிய நண்பர்களே,**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவரும் ஆகிய, அண்ணன், அமிர்தலிங்கத்தின் வாழ்க்கை வரலாற்று ஏட்டின் ஒருபக்க சம்பவங்களை உள்ளடக்கி, அண்ணா நீ வாழ்க, என்ற பெயரில் இந்நூலை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஐம்பத்தி ஐந்து அகவைகள் தாண்டி வரும் இந்நாளில், அண்ணனின் தியாகத் தழும்பு நிறைந்ததும் கண்ணீர் புஷ்பங்களால் அர்ச்சிக்கப்பட்டதுமான, வீரவரலாற்றின் சில அத்தியாயங்களை மட்டுமே தொட்டிருக்கிறேன்.

வெறும் உணர்ச்சிகளுக்கு மட்டும் அடிமைப் படாமல் பொறுப்போடு கொள்கை பிறழாது, தொய்வின்றி, விடா முயற்சியின் துணையோடு, தமிழர் வாழ்வும் நிலையும் உயர, தமிழினம் தனியொரு நாடு அமைத்திட பூக்கும் தமிழ் ஈழத்தின் புரட்சிக் குரல் கொடுக்கும், முப்பத்தைந்து லட்சம் தமிழரின் நல்வாழ்வில் ஒளி ஏற்றிடும் நம்பிக்கைச் சுடர் அண்ணன் அமிர்தலிங்கம்.

அண்ணனின் பிறந்த நாளுக்கு ஒரு வாழ்த்தாக அமைத்திடும் இந்நூல், கட்டுவன் கிராமத்திலே தமிழரசுக் கட்சியை நிலை பெறவைத்தவரும் தந்தை செல்வா சாத்வீக வழியில் நடத்திய சத்தியாக்கிரக போராட்டம், சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், திருமலை பாதயாத்திரை. ஆகிய போர்ப்பரணி பாடிய போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டவருமான, இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர் மதிப்பிற்குரிய உயர் திரு. வ, சின்னத்துரை அவர்களின் பூரண ஒத்துழைப்போடு வெளிவருகிறது,

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனிப் பெரும் தலைவரையும், அவரைச் சார்ந்த, இன்றைய அரசியல் நிலையையும் தெளிவு படுத்துவதுடன் அண்ணனுக்கு எதிராகச் சிலரால் திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட விசமப் பிரசாரத்தை முறியடித்து உண்மை நிலையை தமிழ் ஈழ மக்களுக்கு ஓரளவாவது உணர வைத்தலே இந்நூலின் நோக்கமாகும்.

நூலாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க அமிர்

ஒரு பொழுது தமிழ் குலத்தின் கொடி பறக்கும்
ஓங்கு புகழ் தமிழ்ச்சாதி ஆட்சி செய்யும்
நிமிர் நடையான் ஏறுடையான், அமிர்தலிங்கம்
அவன்தலைமை தமிழினத்தின் வளர்ச்சிநோக்கும்
அருங் குலத்து நடை பயில்வான் ஆட்சி செய்வான்
பழந்தமிழர் வாழ்வினிலும் தாழ்வு இன்றி
படைநடத்தும் நடையுடையான் பழமை பேணி
நடக்கின்ற நடையிலே இடி முழங்கும்
கோடையிடி போல திரும் பேச்சினிலே
கொட்டுகின்ற மாரியென்னும் சொல்லினிலே
பொதிகை மலைத் தென்றலெனும் நடையினிலும்
போர்முரசம் ஆர்த்து வரும் உடையினிலே வரும்
என்தலைவன் அவன் சொன்னால் இமயந்தன்னை
எடுத்தெறிவேன் பெயர்த்து வந்து காலில்
வைப்பேன்
முன்னாளில் இந்நாட்டை ஆட்சி செய்த
மூவேந்தர் வழிவந்தோம் தயங்கமாட்டோம்
பண்பான தமிழ்ச்சாதி வாழ்வு பேணப்
படை நடத்தும் என்தலைவன் அடி பணிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர் வாழ்க

"தமிழுக்கு அமிழ் தென்றுபேர் அன்புத் தமிழ்
இன்பத் தமிழ் எந்தன் உயிருக்கு நேர்"

பாசமும் பரிவும் அன்பும் நிறைந்த எங்கள் இனிய இலட்சிய உள்ளமே, ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல வந்த மாமணியே, தமிழ் ஈழப் பூங்காவிற் பூத்து வந்த மலர்களிலே நறுமணம் கமழும் மல்லிகை நீ. கோடி மலர்களிலே கொள்கை பிறழாத இலட்சிய மலராய் மலர்மணம் கமழ்ந்தவன் நீ. எண்ணற்ற சோதனைகள் உனக்கு ஏற்பட்ட போதிலும் பண்ணற்ற வசைக் கவிதை பாடிய போதிலும் விண்ணுற்ற செங்கதிர் போல் பிரகாசித்தவன் நீ.

முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் வென்ற சோழப் பெரு வேந்தன் ராஜராஜனை, தமிழ் ஈழ மக்களுக்கு நினைவூட்டியவனே, தங்கம் நிகர்த்த தலைவனே, முன்னர் இந் நாட்டை ஆட்சிசெய்த சிறப்பைப் பங்கமறத் தமிழ் மக்கள் மீட்டுதற்கு வழிசெய்த பாசறைத் தளபதி நீ.

"சிங்கள அரசாங்கங்களோடு இனி நாம் வாழமுடியாது. தமிழ் ஈழம்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்தமுடிவு" என்று தேர்தல் காலத்தில் பட்டி தொட்டி, மூலை முடுக் கெல்லாம் கொட்டி முழங்கியவன் நீ. கொள்கை தவறாத உன் கருத்துக்கு மக்கள் அளித்த தீர்ப்பு மகேசன் அளித்த தீர்ப்பு ஆகும்.

சந்தர்ப்பத்தின் நிர்ப்பந்தத்தால் சாதனைகள் மறைய லாம். சரித்திரமே மாறலாம். போற்றுபவர் போற்றலாம். தூற்றுபவர் தூற்றலாம். ஆனால் உன் வரலாறு காலத்தால் அழிக்கமுடியாத வரலாற்று நதியின் அணைக்கட்டு. குற்றால மலையினில் குதித்து வரும் இளந்தென்றல். வற்றாது ஊற் றெடுத்த நீரருவி உன் செயற்பாடு. தெள்ளு தமிழ் நடை யில் இளைஞர்கள் உள்ளமெல்லாம் பூரிக்க மேடையிலே வெண்கலக் குரலில், கொள்கை மாறாத கருத்துக்களை எடுத்துரைப்பவன் நீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வெள்ளம் கடலலைபோல் திரண்டுவர இன்றைய தினம் தமிழ் ஈழத்தின் முதல்வனாக, தலைவனாகப் பவனி வருபவன் நீ.

நீ பல்கலைக் கழகத்தில் இருந்த போதே தமிழ் ஈழத்தைப் பற்றிச் சிந்தித்த சிந்தனையை எவரும் மூடிமறைக்க முடியாது. வேங்கடத்தை வடக்கெல்லையாகவும் அனுராதபுரத்தையும் மட்டக்களப்பையும் தெற்கெல்லையாகவும் கொண்ட சுதந்திர தனித்தமிழ்நாடு நிறுவப்பட வேண்டும் சேதுவை மேடுறுத்தி வீதி சமைக்க வேண்டும் என்ற வலையாத நெஞ்சகப் பாரதியின் கனவை நனவாக்கப் புறப்பட்டவன் நீ.

நாடு போற்றும் நல்லறிஞர் நீங்காத்துயில் கொண்ட பின்னால் நீடுபுகழ் கொண்ட வரலாற்றின் தேசிய மொழி, உயர்தனிச் செம்மொழி, தமிழ்மொழி வாழ வழிகாட்டியவன் நீ. மாபெரும் தலைவனே, தளபதியே நீ வாழி.

# அமிர் அண்ணா வாழ்க!

இந்த மூன்றெழுத்து ஒரு குடும்பதின் மூத்த சகோதரனைக் குறிக்க மட்டுமே பயன்பட்ட உறவுச் சொல். 1949-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18-ம் திகதிக்குப் பின் தமிழ் ஈழ அரசியலை வளர்க்கும் உயிர்ப்புச் சக்தியாக தமிழரசுக் கட்சியின் மந்திரமாக மாறிவிட்ட பெருமைக்குரியதாயிற்று இந்த மூன்றெழுத்து. அமிர் சொன்னால் நாவினிக்கும். சுவைத்தால் நெஞ்சினிக்கும். எண்ணினால் வண்ணத் தமிழே கண் முன்னால் ஓடிவரும். மந்திரச் சொல் அது.

தமிழ் ஈழத்தின் வரலாற்றை மாற்றி அமைத்த பெருமைக்குரிய தாயிற்று இந்த மூன்றெழுத்து. ஒரு வரலாறு ஆகி நின்ற மாமனிதனின் புகழ்ப் பெயருக்கும் உரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயீற்று. வெறும் உணர்ச்சிப் பெருக்காக உதடுகள் உதிர்க்கின்ற வார்த்தை அலங்காரமல்ல அது. உள்ளத்தில் இருந்து பீறிட்டுக் கிளம்பும் உயிர்ப்புச் சக்திகளின் ஒலி வடிவம் இந்த மூன்றெழுத்து.

என் அன்புத் தலைவனே! பாட்டுடைத் தலைவன் படை எடுத்து வரும்போது, காட்டாற்று வெள்ளம்போல் பாய்ந்து செல்லும் எர்மைத் தடுத்து நிறுத்தினுய். "நிதானமாகச் செல்லுங்கள். நாடு உங்களை நம்பி இருக்கிறது" என்றுய். எமக்கெல்லாம் பெருந் தலைவனுகித் தேர்தலில் நின்றுய். காலதேவன் உன்னை இந்நாட்டின் தலைவனுக்கி வரலாறு படைத்திருக்கிறுன்.

பொறுப்புக்கள் அதிகரிக்கின்றன, கடமைகள் காத்திருக்கின்றன. தனி மனித வரலாற்றில் நீ ஒரு மைல்கல். காய்த்தமரம் கல்லெறி வாங்கும் என்பார்கள் முதியோர்கள். அண்ணு நீ வாழ்க! தொண்டர்கள் உன்னை நம்பியிருக்கிருகள். தொண்டனுக்குத் தொண்டு செய்யும் தொண்டன் நீ என்பதால் என் அன்புத் தலைவனே! தமிழனின் தலைவிதியை நிர்ணயிக்கும் இந்தநாட்டு அரசின் சாபக் கேட்டிற்குப் பலியானுய். உன்னை காலிமுகத் திடலில் கழுவில் ஏற்றுவேன்'' என்கிறுன் ஒருவன்; அந்த இடத்தில் ,'தூக்கில் இடுவேன்'' என்கிறுன் அடுத்தவன்; ''அங்கம் பிளந்து, இரண்டாய்க் கிழித்து, கட்டித் தொங்கவிடுவேன்'' என்கிறுன் மூன்றுமவன்.

தமிழ்ச்சாதி எதையும் தாங்கிப் பழக்கப்பட்டது. எதையும் கேட்டுப் பழக்கப்பட்டது. காலிமுகத் திடலில் இரத்தம் சிந்திஞய். முற்றவெளியில் பொலிசாரால் தாக்கப்பட்டாய், உனது பச்சை இரத்தம் சிந்தியதால் காலிமுகத்திடல் இன்று பசுமையாகக் காட்சி அளிக்கிறது. சிங்கள ஸ்ரீயை எதிர்த்தாய், சிங்கள வெறியரால் தாக்கப்பட்டாய். திருகோணமலைவரை நடை தொடர்ந்தாய்; தமிழினத்துக்கு வாழ்வளித்தாய்; எமது உரிமையை வேண்டி வெண்கலக் குரலில் குரல் கொடுத்தாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தமிழனின் காதுகளில் அது எதிரொலித்தது. கட்டுப்பேத்தை மாணவர்களின் பிரச்சினையில் இனமத, பாகுபாடின்றி தலையிட்டு வெற்றி கண்டாய், பல்கலைக் கழக மாணவனை விடுதலை செய்யக் கோரினாய். அவன் விடுதலை செய்யப்பட்டான். மூலைக்குள் முடங்கிக் கிடந்தவன், மூச்செறிந்து மேடையேறி, வசை மழை பொழிகிறான். இவனுக்குப் பழக்கப்பட்ட மூவேந்தர் சேர, சோழ, பாண்டியர்கள் அல்ல; காசி, அமிர், கணேசு இவர்கள்தான் சேர, சோழ, பாண்டியர்கள் என்று எழுதுகிறான்.

மக்கள் அவனை அடையாளம் கண்டு கொள்கிறார்கள். எழுதக் கூடாதவன், எழுத ஆரம்பித்தால், எப்படி எல்லாம் எழுதுவான் என்பதற்கு இவன் ஒரு எடுத்துக் காட்டு. ஏலக்கடை வைத்திருப்பவன் பத்திரிகை எழுத ஆரம்பித்ததைப் போல அவன் ஆகியிருக்கின்றான். நாட்டின் இன்றைய சூழ்நிலைகள், கருமேகங்களாய். இருண்டு கிடக்கின்றன. மேகத் திரை அகலும். இரவு கலையும். விடிவெள்ளி தோன்றும், தமிழீழத்தின் விடிவும் அண்மிவிடும். தந்தை செல்வா தமிழினத்துக்குத் தந்து விட்டுச் சென்ற கருத்துப் பேழையே! கற்பூரப் பெட்டகமே! அண்ணா நீ வாழ்க. உன் சுண்டுவிரல் அசைவுக்கு கட்டுண்டு நிற்கிறோம். எழிச்சியுற்ற தமிழ் ஈழத்தின் புரட்சி வரலாறு படைத்தவனே நீ வாழ்க. புதுமைத் தலைவா!

தந்தை சொல் மந்திரம். தனக்குப் பின் நீ தான் என்று ஐயா சொன்ன கருத்து இன்னும் என் காதில் ஒலிக்கிறது. அமிர்தலிங்கத்திடம் நான் காணும் முக்கிய சிறப்பியல்பு அவருடைய அஞ்சாமையாகும். மிகப் பலம் வாய்ந்த நமது எதிரியான, இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து நாம் போராடுவதற்கு, அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களே வேண்டும். அமிர்தலிங்கத்திடம் பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் திறமையாகப் பேசும் ஆற்றல் படைத்தவர். தலைவன் ஒருவனுக்கு வேண்டிய குணங்கள் அவரிடம் உண்டு. தமிழ் ஈழ மக்களுக்காகப் போராடுவதற்கு அவருக்குப் போதியகாலம் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதைப் பொறுத்தவரை அவர் ஒரு இளைஞர் என்றே குறிப்பிடவேண்டும். எனது காலத்திலேயே தமிழ் மக்களின் விடுதலை கிடைத்து விடுமெனப் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படி அது கிடைக்காமற் போனாலும் அமிர்தலிங்கத்தின் வாழ்நாளிலே அது கிடைத்துவிடும் என்று நான் நம்புகிறேன்'' ஐயா அவர்கள் அண்ணனைப் பற்றிப் கூறிய கருத்துக்கள் இவை.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே''

— பாரதி

காகத்தின் கூட்டிற்குள் முட்டை இடும் குயில் பறவையைப்போல தந்தை செல்வாவின் புகழிலே தங்கியிருக்கும் ஒரு கூட்டம் தந்தை செல்வாவின் கட்சியையே கிண்டல் செய்கிறது. இவர்களை நாடு அடையாளம் கண்டு கொள்ளட்டும். விடுதலைப் போரில் நீ ஒரு வேங்கை. இமய மலையை நிகர்த்த தோள் உடையவனே! உன்னை நம்பி நாடு இருக்கிறது. நாட்டில் நீ இல்லாதபோது தமிழ் மக்கள் தனியாக்கப்படுகிறார்கள்.

''தமிழ் ஈழத்தில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும் நானே பொறுப்பாளி. நாதியற்ற தமிழ்ச் சாதியை நடுத் தெருவில் விட்டுவிடமாட்டேன்'' என்று எமக்குத் தெம்பும், உணர்வும் ஊட்டியிருக்கின்றாய். ஈழத் தமிழர்மீது அன்பும், பாசமும், பற்றும் கொண்ட அமெரிக்க நியூயோர்க் தமிழர்கள் நடத்திய தமிழ்ஈழ மகாநாட்டில், இன்றைய தமிழனின் அவல நிலையை தெளிய வைத்த தியாகத் தழும்பே! என் னருமைத் தலைவா! குட்டை குழப்ப நினைத்தவனை, அங்கேயே மட்டை அடிக்க வைத்துவிட்டு நீ நாடு திரும்பி யிருக்கின்றாய். அரங்கேறி அலையாய் அலைந்து மேடை ஏறி அழகு தமிழ் பேசியவன் பத்திரிகையிலும் குட்டை குழப்ப நினைத்திருக்கிறான். தமிழ் ஈழத் தமிழனின் இன்றைய நிலைக்கு அண்ணனே நீ காரணம் காட்டி வைத்திருக்கிறாய். ஆனாலும் அவன் நியாயங்கள் பேசியவாறே இருக்கிறான். ''மக்கள் என் தலைமையை ஏற்கவில்லை என்றால் இன்றே, நாளையோ நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே இறங்கி வந்து இவர்கள் சொல்பவர்களிடம் எனது பொறுப்புகளை ஒப்படைத்து விட்டு விலகத் தயாராக இருக்கிறேன்''

---

'' நாங்கள் கவரிமான் சாதி நாய்போல் எசமான் அடிகளை நக்கோம்
தீங்கு படைப்பவன் எங்கே, தேடி உதைப்போம் செருக்களம் வாடா ''

---

படகை ஓட்டி வந்த தலைவன், நடுக்கடலில் புயல் வீசுகிறது என்பதால், 'எனக்கு நீந்தமுடியும். உங்களால் முடிந்தால் நீங்களும் தப்பித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறுவதுபோல் அல்லவா இருக்கிறது. 30 இலட்சம் தமிழர்களும் தங்கள் தலைமையில் அசைக்க முடியாத நம்பிக்கை அல்லவா வைத்திருக்கின்றார்கள்.

பதவி தேடி வந்தவர்கள் இடையிலே விட்டுச் செல்லலாம். சுகம் தேடியவர்கள் இடையிலே வரிந்து கட்டி நன்றி மறக்கலாம். நாம் மட்டும் கோபுரத்துக் கலசங்கள் அல்ல. அத்திவாரக் கற்கள். கலசத்தைத் தாங்கி நிற்கிறோம். 'நாங்கள் கோபுரத்துப் பொம்மைகள். தொண்டர்களே, உறுதியான கட்டிடங்கள்'' என்று அன்றொருநாள் தந்தை செல்வா கூறினார் கருத்துப் படையல்.

அமைதியான காற்றிலே, ஆலமரமாய் நின்று, எல்லோருக்கும் பயன்தரும் கற்பகதரு நீ! குறை சொல்வதற்கும், திட்டித் தீர்ப்பதற்கும் சில கட்சிகள் இருக்கலாம். தரையை முட்டிச் செல்லும் அந்தக் கப்பல்கள் ஒருநாள் உடைந்து போகலாம். ஆனால் எமது கலம் உறுதியானது.

நியாயமான பேச்சு, நீதியான போக்கு, மக்களைக் குட்டை குழப்ப நினைப்பவன் மண்டையைப் போட்டுக் கொள்ள வேண்டியதுதான். தலைமையைத் தாக்கிப் பேசுபவன் தலைமை தாங்குகின்ற தகுதியைப் பெற்றிருக்கிறானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா நீ வாழ்க! பவளமணி மாளிகையில் பனிமலரின் பஞ்சணையில் வாழ்ந்து செழிக்கவேண்டிய நீ பாழ்பட்டு நிற்கும் தமிழ் ஈழ மக்களுக்கு வாழ்வளிக்க முன் வந்தாய். இன்று நீ அடைந்திருக்கும் பதவி, சுகம் படாடோப வாழ்வு உனது குடும்பத்தைச் சீர்செய்து இருக்கிறதா?

ஒரு நாளாவது உன்னால் ஓய்வெடுக்க முடிகிறதா? காலை என்றதும் தொண்டர்களின் பிரச்சினைகளைத் தாங்கிக் கொள்கிறாய். மதியம் என்றதும், வெளிநாட்டுத் தூதுவர்களுக்குப் பேட்டி கொடுக்கிறாய். மாலை என்றதும், கூட்ட அழைப்பை ஏற்று, அங்கு செல்கிறாய். இடையில் இலட்சிய உள்ளங்களுக்குக் கடிதம் எழுதுகிறாய். பத்திரிகைகளுக்குப் பேட்டி, பாராளுமன்ற அலுவல், வேலை அற்றோர் பிரச்சனை, கைது செய்யப்பட்டவர் நிலை, அப்பாடா, ஒரு தலைவனுக்கு இவ்வளவு பிரச்சினையா? இடையில் குடும்பம், மனைவி, பிள்ளைகள்.

சொந்த மகனையே பிரிந்து இருக்கும் கொடுமை. திட்டித் தீர்க்கும் பச்சோந்திக் கும்பல். மழைகாலத் தவளை போலக் கத்திப் பொருமட்டும். அநியாய அரசியல் பேசி மக்களை மடையர்களாக்கிப் பிழைப்புக்கு வழி தேடிய கும்பலின் கொட்டம் அடங்க உள்ளதைப் பேசிச் சொன்னதைச் செய்து சாயங்கால உதயம்போல உதித்த வெண்ணிலவே என்னருந் தலைவா! அளவிடமுடியாத சாதனைகளைச் செய்துவிட்டு அமைதியான நிலை அடைந்தவனைப் போல பரிணமித்திருக்கும் பரிபூரண தலைவனே! இட்ரயல் அட்பார் நீதிமன்ற வழக்கில் நீ குற்றவாளி ஆக்கப்பட்டிருந்தால், பெருமைக்குரிய நீதி மன்றம் தங்கள் சொத்துக்களை அபகரித்திருந்தால், வாய் பிளந்து பரிதாப வார்த்தைகளை எழுதிக் கொட்டியிருக்கும் சுதந்திரன் ஏடு. ஒப்பாரி வைத்து நீலிக் கண்ணீர் வடித்திருக்கும் தினபதி ஏடு.

**தமிழ் ஈழத்தின் தங்கம் நிகர்த்த தலைவனே;** தமிழ்ச் சமுதாயம் ஏழாயிரம் ஆண்டு வாழ அடிக்கல் நாட்டி உறுதியான கட்டிடத்தை சமைக்க வழி காட்டு. நாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த இனக்கலவரங்கள், நாசவேலைகள், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, நாட்டில் தலையெடுத்திருக்கும் இந்த நேரத்தில் உனது நிழலில்தான் தமிழர் வாழ்வும் வளமும் புகழும் தங்கியிருக்கிறது.

அண்ணா நீ வாழ்க! தமிழ்ச் சாதி பத்து நூறாய்ப் பிளவுபட்டிருக்கும் போது, ஒரே கொள்கையுடன், புதிய தெம்பும், உணர்வும் ஒளிவிட வான வீதியில், பிரகாசித்து ஆயிரம் ஆயிரம் நட்சத்திரங்களுக்கு மத்தியில், பால் பொழியும் சித்திரை மாதப்பூரணை நிலவு உதயகாலத் தென்றல் உலகம் போற்றும் உத்தம தலைவன் தந்தை செல்வாவின் பாட்டுடைத் தளபதி, பூமணத்தை வெல்லும் புகழ்மணம் கொண்ட பொன்னார் தலைவனின் புனித வழியில் நின்று சிரித்தபடியே உங்கள் செயல்கள் பரிணமிக்கின்றன.

நலிவுற்று இருக்கும் தமிழ் ஈழத்தின் நல்வழி காட்ட உன் தோள்கள் ஆர்த்து எழுக! பூத்துவரும் தமிழ் ஈழத்தின் புன்மை அகற்றிட, தினவெடுத்த தோள் படைத்த தலைவனே வருக. மதம் பிடித்த யானை ஒன்று தினம் வளர்த்த செவ்வாழைத் தோட்டத்தை அழிக்க முற்படும் போது தினவெடுத்த தோள்தட்டிச் சிங்கள ஸ்ரீயை எதிர்த்துப் புதிய போர்ப்பரணி பாடிய என் தலைவனே! இரவு நேரத்துப் புகையிரதம் செல்லும்போது பிரயாணிகள் பலர் உல்லாசமாகக் கண் அயரப் புகையிரதச்சாரதி மட்டும் கண் அயர்ந்து கடமையைச் செய்யத் தவறினால் பிரயாணிகள் நிலை என்னவது?

அண்ணா நீ வாழ்க! வரலாற்றில், புகழ் படைத்து முத்திரை பதித்து, வான்கதிர் போல் ஒளி வீசி, வையகம் சிலிர்க்க, தமிழர் உள்ளம் போற்றிப் பனுவல் புகழ்ந்திட அண்ணா நீ வாழ்க! ஆயிரம் ஆண்டில் ஒருமுறை மலரும் குறிஞ்சி மலர்களைப் போலே, தன்னலமில்லாத் தலைவர்கள் பிறப்பர் ஆயிரத்தில் ஒரு நாளே என்ற முதுமொழியை உவமை ஆக்கி உலகம் புகழும் உத்தமனாகப் பல்லாண்டு வாழ்ந்து அழியாத காவியமாகத் தமிழ் ஈழ ஓவியமாக நிலைத்துப் புகழ் பெற்று வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க! வாழ்க!! தமிழீழம்
வாழ்க! அமிர் அண்ணு!

பட்டம் அளித்து பதவி கொடுத்தொரு
பக்கம் இழுத்தாலும் ஆள்வோர்
கட்டி அணைத்தொரு முத்தம் கொடுத்து என்
கால் கை பிடித்தாலும் மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்
துடைக்க மறப்பேனு?

— கவிஞர் காசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சி முதல்வருக்கு

எமது

பிறந்ததின வாழ்த்துக்கள்

# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

சுண்ணகம்.

---

அமிர் அண்ணனுக்கு

எமது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

# ஜெயம்

# றேடியோ சேர்விஸ்

&

# றைக்கோடிங் பார்

குரும்பசிட்டி வீதி, — கட்டுவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரைப்பற்றி..



இந் நூல் ஆசிரியர் திரு. சி. சிவஞானம் அவர்கள், கட்டுவன் வளமாரிப் பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர், எழுத்தாளர், நடிகர், கவிஞர். இவரது படைப்புக்கள் இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் பிரசுரமாகிப் பலரது பாராட்டையும் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

கவி அரங்குகளில் இவரது கவிதைகளைக் கேட்பதற்கென்றே ஒரு கூட்டம் வருவதை அவதானிக்கலாம்.

அரசியலில் இவர் ஆரம்பத்தில் தமிழரசுக்கட்சியிலும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் சேர்ந்து தொண்டாற்றி வருபவர். 1972-ம் ஆண்டுக்குப் பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் களத்தில் முன்னின்று உழைத்தவர்.

கவிஞர் சிவஞானம், தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களைப்பற்றி எழுதிய 'அண்ணா நீ வாழ்க' என்ற இந்த அரிய நூல் அவரின் அரசியற் சாதனைகள் பற்றிய ஒரு குறிப்பேடு. படித்துப் பாருங்கள்; பயனைப் பெறுங்கள்.

கட்டுவன்,
தெல்லிப்பளை.
25-8-82.

த. சண்முகநாதன்
செயலாளர்
விசுவநாதப்புலவர் ச. ச. நிலையம்

அம்பிகா அச்சகம், குரும்பசிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org